<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர். ஷர்மிளா | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 22.1.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது துணை ஆணையர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ஆம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியராக கடலூர் மாவட்டத்தில் பணிபுரிந்த போது கடலூர் மத்திய சிறையில் சிறைவாசியாக இருந்த திரு.சுரேஷ்,வயது 41, த/பெ. முத்து கிருஷ்ணன் 05.03.2011 அன்று சிறையில் மதியம் 1.45 மணியளவில் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. அந்த தகவலின் படி கடலூர் புதுநகர் காவல் நிலைய குற்ற எண் 119/2011 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நீதித்துறை நடுவர் எண் 1 கடலூர் அவர்களால் விசாரணை செய்யப்பட்டது. அரசாணை நிலை எண் 15, நாள்– 07.01.2013 மற்றும் மாவட்ட ஆட்சியரின் கடித நகல் C3 7871/2011, Dt.19.03.2011 அதில் மேற்படி குற்றம் சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க

ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் கு.வி.மு.ச பிரிவு 200ன் கீழ் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2, கடலூரில் தனிப்பட்ட குற்ற முறையீடு புகார் தாக்கல் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனிப்பட்ட குற்ற முறையீடு புகார் தான் நான் கொடுத்தது. அது **அ.சா.ஆ. 1** ஆகும். 23.09.2011 தேதியிட்ட நீதித்துறை நடுவர் அவர்கள் கொடுத்த விசாரணை அறிக்கை, 06.03.2011 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை, விசாரா அறிக்கை, முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நான் அ.சா.ஆ.1 யை தாக்கல் செய்தேன். 23.09.2011 தேதியிட்ட நீதித்துறை நடுவர் அவர்கள் கொடுத்த விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.2,** 06.03.2011 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த அறிக்கை **அ.சா.ஆ.3,** பிரேத பரிசோதனை அறிக்கை, **அ.சா.ஆ.4,** விசரா அறிக்கை **அ.சா.ஆ.5** குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் புகார்குறித்து முதல் நிலை வாக்குமூலம் தாக்கல் செய்தேன். நான் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை. அரசாணை நிலை எண் 15, நாள்–07.01.2013 **அ.சா.ஆ..6** மற்றும் மாவட்ட ஆட்சியரின் கடித நகல் C3 7871/2011, Dt.19.03.2011 **அ.சா.,ஆ.7,** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8**

17.08.2011 தேதியிட்ட நீதித்துறை நடுவர் எண் 2 அவர்களின் கடிதம் **அ.சா.ஆ.9** மற்றும் 26.09.2011 தேதியிட்ட நீதித்துறை நடுவர் எண் 2 அவர்களின் கடிதம் **அ.சா.ஆ.10**. நாவடி எலும்பு அறிக்கை **அ.சா.ஆ.11**

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மாவட்ட ஆட்சியர் என்னிடம் தனி புகார் கொடுக்க சொன்ன பிறகு இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சாட்சிகள் யாரையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை. நீதித்துறை நடுவர் எண் 2 அவர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களை கொடுத்தார் , அதன் அடிப்படையிலும் நான் தனி புகார் கொடுத்தேன். மத்திய சிறை காவல் கண்காணிப்பாளர், NT காவல் நிலையத்திற்கு கொடுத்த புகாரினையும் நான் பார்வையிட்டேன். அந்த புகாரின் பேரில் கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தது தான் எனக்கு தெரியும். அந்த புகாரின் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நீதித்துறை நடுவர் எண் 2 அவர்கள் கொடுத்த அறிக்கையில் எந்த எந்த போலிசார் என்று பெயர்களை குறிப்பிட்டு அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் எந்த போலிஸ் பணியில் இருந்தார்கள் என்ற பெயர் குறிப்பிட்டுள்ளார்கள். இறப்பிற்கு காரணம் எந்த போலிஸ் தாக்குதல் என்று பெயர் குறிப்பிடவில்லை. வடலூர் போலிசார் என்று குறிப்பிட்டுள்ளது. எனது தனிப்புகாரிலும் எந்த போலிசார் இறப்பிற்கு காரணம் என்று எதிரிகள் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் கடைசி பத்தியில் 7 எதிரிகளின் பெயரை சொல்லியுள்ளேன். பக்கம் 3 ல் எந்த எந்த போலிசார் பணியில் இருந்தார்கள், யார் யார் காயம் ஏற்படுத்தினார்கள் என்று பெயர்களை குறிப்பிட்டுள்ளேன். ஆனந்த பாபு என்ற உதவி ஆய்வாளர் கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். நீதித்துறை நடுவர் எண் 2

அவர்களின் அறிக்கையில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு அன்றைய தேதியில் வடலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இறந்த சுரேஷை மத்திய சிறை சாலைக்கு யார் S கார்டு செய்தார்கள் என்ற போலிசார் பெயரையும் நீதிபதி குறிப்பிட்டிருந்தார். அதன் உண்மை தன்மையை அறிய நான் என்ன தனிப்பட்ட முறையில் விசாரணை செய்தேன் என்றால் புகார் தாக்கல் செய்ய சொன்னதால் இருந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் பார்வையிட்டு புகார் தாக்கல் செய்தேன். வடலூர் காவல் நிலைய காவல் நிலைய பொதுநாட்குறிப்புகள், கைது குறிப்புகள், சுரேஷ் குற்றவாளியாக காண்பிக்கப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கை, பாரா புக், காவலர்களின் பணிபட்டியல் officers duty dairy ஆகியவற்றை பெற்று பார்வையிட்டு பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை. சம்பவ காலத்தில் எதிரிகளுடைய Duties and responsibility குறித்த பதிவேட்டினை பெற்று நான் பார்க்கவில்லை. சுரேஷ் என்பவரை காவல் துறையினர் கைது செய்யப்பட்ட போது யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தனிப்புகார் தாக்கல் செய்வதற்கு முன்பு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கடிதம் எழுதி எதிரிகள் மீது எதாவது குற்ற உள்துறை விசாரணை உள்ளதா என்று விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் எதிரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். அந்த அறிக்கையினை நான் பெற்று பார்த்தேனா என்றால் அது அவர்களின் துறை சார்ந்த நடவடிக்கை அதை என்னிடம் காண்பிக்கவில்லை. எதிரிகள் மீது எந்த வித குற்றமும் செய்யவில்லை என்று

துறை அறிக்கையில் சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. சுரேஷ் என்பவரை கைது செய்தபிறகு Remand Report யை பார்வையிட்டேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு முன்பு Fit for remand என்று மருத்துவர் கொடுத்துள்ள அறிக்கையை பார்வையிட்டேன். எதிரியை கைதுசெய்து சிறைக்கு கொண்டு சென்ற போது சிறை அதிகாரி சிறையில் உள்ள மருத்துவர் பரிந்துரையின் பேரில் சிறையில் அனுமதிக்காமல் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ள சான்றிதழ்களை நான் பார்வையிடவில்லை. ஆனால் அது நீதித்துறை நடுவர் அறிக்கையில் இருந்ததை நான் பார்வையிட்டேன். அதனால் நான் என் மனதை செலுத்தாமல் முழு திருப்தி கொள்ளாமல் நீதித்துறை நடுவர்அறிக்கையை மற்றும் முதல் தகவல் அறிக்கை மற்றும் மற்ற ஆவணங்களின் அடிப்படையில் இயந்திரதனமாக தனிப்புகார் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார் மேலும் குறுக்கு விசாரணை–**

தனிபுகார் தாக்கல் செய்வதற்கு முன்பு மத்திய சிறை சாலையை நான் பார்வையிடவில்லை. மேல் அதிகாரியின் நிர்பந்தத்தின் பேரில் புகார் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கீதா | வயது | : | 43 |
| தந்தை/கணவர் பெயர் | : | செந்தில் குமார் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 22.1.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். நான் கோயம்புத்தூரில் வீடு வீடாக சென்று முடியாதவர்களுக்கு ஹோம் நர்சாக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.02.2011 அன்று என் கணவர் செந்தில் குமார் வடலூர் சபையில் இறந்துவிட்டார். 27.02.2011 காலையில் தான் எனக்கு செய்தி கிடைத்தது. அதன் பிறகு நாங்கள் அனைவரும் வடலூர் சபைக்கு சென்று பார்த்தோம். என் கணவர் சபையின் மைதானத்தில் இறந்து கிடந்தார். அங்கிருந்து வடலூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். என்னையும் என் உறவினர்களையும் போலிசார் விசாரணை செய்தார்கள். என் கணவர் சனிக்கிழமை மாலை ஓட்டுநர் வேலைக்கு வெளியூர் செல்வதாக சொல்லி சென்றவர் வரவில்லை என்று நாங்கள் தகவல் சொன்னோம். சனிக்கிழமை என் கணவர் இறந்தார். ஞாயிற்றுக்கிழமை பிரேத பரிசோதனைக்கு முடித்து பிரேதம் எடுத்து வந்து அடக்கம் செய்தோம்.

திங்கட்கிழமை ஜவஹர் ஆய்வாளர் வடலூர் காவல் நிலையத்திற்கு வரசொல்லி அழைத்து சென்றார். ஒரு நாள் முழுவதும் நான் காவல் நிலையத்தில் தங்கியிருந்தேன். என் கணவர் இறந்த அன்று எனக்கு அம்மை போட்டிருந்ததால் என்னை அடிக்கவில்லை. உடன் வந்திருந்த என் சித்தப்பா, சித்தி, என் கணவரின் நண்பர்கள் மற்றும் யார்யார் மீது போலிஸ்க்கு சந்தேகம் உள்ளதோ அவர்களை விசாரித்தனர். எல்லைரையும் அடித்தார்கள். அங்கிருந்த போலிசார் 10 பேரில் 3 பேர் அடித்தார்கள். அவர்கள் பெயர் தெரியாது. எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று எவ்வளவு சொல்லியும் அடித்தார்கள். அந்த நேரத்தில் எனக்கு நிறைய போன் வந்திருந்தது. அதனை பார்த்த ஆனந்த் பாபு இன்ஸ்பெக்டர் என்னிடம் யார் அந்த மகாலட்சுமி என்று கேட்டார். நான் எனக்குத் தெரியாது. அப்படி யாரும் எனக்கு தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டேன். அதன் பிறகு என்னை மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் மகளிர் காவல் நிலையத்தில் நான் இருக்கும் போது என் வீட்டில் இருந்து சாப்பாடு கொண்டு வந்தவர்கள் குற்றவாளி கிடைத்துவிட்டதாகவும் இன்னும் 2 நாளில் உன்னை வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். வெள்ளிக்கிழமை அன்று போலிசார் என்னை வீட்டிற்கு அழைத்து செல்வதாக சொல்லி மகளிர் காவல் நிலையத்திலிருந்து வடலூர் காவல் நிலையத்திற்கு வந்த பிறகு நான் தான் என் கணவரை கொலை செய்ய சொன்னதாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கம்பால் என் கையில் அடித்து வற்புறுத்தி கையெழுத்து போட சொன்னார்கள். நான் கையெழுத்து போட மாட்டேன் என்று சொன்னதற்கு எல்லாம்

முடிந்து விட்டது கையெழுத்துபோடு என்று சொன்னதால் கையெழுத்து போட்டேன். வடலூர் காவல் நிலையத்திலிருந்து என்னை remand செய்வதற்கு ஒரு பெண் போலிஸ் மற்றும் என்னுடன் இரண்டு ஆண் போலிஸ், அது மட்டும் இல்லாமல் மேலும் 2 பேர் ரிமாண்ட் செய்வதற்கு ஆக ஆறு பேர் வேனில் இருந்தோம். என்னிடம் கையெழுத்து வாங்கி பேப்பரில் எழுதியது இரண்டாவதாக நிற்கும் எதிரி செல்வம் தான். மற்ற ஆஜர் எதிரி ராஜவேல் வேனில் உட்கார்ந்து வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. மற்றவர்களை ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் அடித்தவர்கள் யாரும் எனக்கு பெயர் தெரியாது. ஆஜர் நான்கு எதிரிகளில் எங்களை அடித்தவர்கள் இல்லை. முதல் எதிரி முரளி உட்கார்ந்து இருந்தார். தர்மலிங்கத்தினை பற்றி எனக்கு ஞாபகமில்லை, வேறு 3 போலிசார் தான் அடித்தார்கள். அவர்கள் ஆஜர் எதிரிகளில் இல்லை. 4ஆம் எதிரி ஆனந்த் எங்களை அடிக்கவில்லை. வேனில் வந்த மற்ற இரண்டு கைதிகள் ஆண்கள் அவர்களை வேனில் ஏறும் வரை அதற்கு முன்பு எனக்குத் தெரியாது. ஆனால் நான் தான் அவர்களுடன் சேர்ந்து என் கணவரைகொலை செய்துவிட்டதாக என் மீதும் கேஸ் போட்டு விட்டார்கள். அவர்களில் ஒருவர் குடித்திருக்கிறார் என்று என்னுடன் வந்த பெண் போலிசாரிடம் நாளை விசாரித்து ரிமாண்ட் செய்து கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் இல்லை 3 நாட்களாக அவர்கள் காவல் நிலையத்தில் தான் உள்ளார்கள், குடிக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த ஆளுக்கு ஒரு மாத்திரை கொடுத்தாலே தாங்காது, 4 மாத்திரை போட்டுள்ளார்கள் என்றும் போலிசார் பேசிக்கொண்டு வந்தார்கள். அந்த கைதிகளின் பெயர் எனக்கு அப்போது தெரியாது.

வேல்முருகன் பார்த்துக்கொள்வார் ஒன்னும் பிரச்சனை இல்லை என்று ஒரு கைதியின் பெயரை ஒரு போலிசார் சொன்னார். ஜட்ஜ் அம்மாவிடம் என்னை அழைத்து போகும் போதும் அம்மை போட்ட விஷயத்தையும், அடித்த விஷயத்தையும் சொல்லக்கூடாது என்று சொல்லி அழைத்து சென்று இருட்டில் நிற்க வைத்தார்கள். எங்களை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வேனில் இந்த வழக்கில் இறந்த எதிரியின் கால் என் கால் மீது பட்டதால் போலிசாரிடம் சொன்னேன். போலிசார் அவரை காலை எடுக்கும்படி சொன்னார். பெண்கள் சிறைக்குள் நாங்கள் எல்லாரும் பேசி வந்ததையும், ஒரு எதிரி என் காலை சீண்டியதையும் சொல்லும் போது அங்கிருந்த சிறைவாசிகள் அவன் எதோ சொல்ல நினைத்திருக்கிறான் ஏன் நீ சொல்ல விடவில்லை என்று என்னை கேட்டார்கள். 4 நாட்கள் கழித்து என் சித்தப்பா என்னை பார்க்க வந்த போது ஒரு கைதி உன்னிடம் பேச வந்ததாக சொன்னாயே அந்த சிறைவாசியை மனு போட்டு சிறையில் போய் பார்த்து விசாரித்து வா சித்தப்பா என்று சொன்னேன். அதற்கு என் சித்தப்பா அவர் பெயர் சுரேஷ் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னார். என் சித்தப்பா சொல்லி தான் இறந்த கைதியின் பெயர் சுரேஷ் என்றும் இன்னொரு கைதி பெயர் வேல்முருகன் என்றும் எனக்கு தெரியவந்தது. அதன் பிறகு நான் ஜெயிலுக்கு போய்விட்டேன். 30 நாட்களில் எனக்கு பெயில் கிடைத்தது நான் வெளியில் வந்துவிட்டேன். என் பெயரில் போட்ட வழக்கு ஒரு வருடத்தில் முடிந்துவிட்டது. என்ன முடிந்தது என்று எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக ஜட்ஜ் அம்மா என்னை விசாரித்தார்கள்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இதற்கு முன்பு 18.04.2015 அன்று கடலூர் நீதித்துறை நடுவர் எண் 2 ல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 18.04.2015 அன்று கடலூர் நீதித்துறை நடுவர் எண் 2 ல் கொடுத்த வாக்குமூலம் எ.த.சா.ஆ.1 ஆகும். 18.04.2015 அன்று கடலூர் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்திற்கு என்னை போலிசார் தான் சாட்சி சொல்ல அழைத்து வந்தார்கள். அதே போல் இந்த வழக்கு சம்பந்தமாக கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை எங்களை தாக்கிய விவரங்களை அப்போது சொல்லவில்லை, ஜட்ஜ் அம்மாவிடம் மட்டும் தான் சொன்னேன். வடலூரிருந்து கிளம்பிய வாகனம் ரிமாண்ட் செய்வதற்காக எங்கும் நிறுத்தாமல் நேராக நீதிபதி அம்மா வீட்டிற்கு தான் வந்தார்கள் என்றால் ஆமாம். எங்கள் மூவரையும் நீதிபதி அம்மா விசாரித்தார் என்றால் பெயர் மட்டும் தான் கேட்டார்கள். அதற்கு முன்பு மருத்துவ பரிசோதனைக்கு எங்கள் மூன்று கைதிகளையும் ஆண் மருத்துவரிடம் அழைத்து சென்றார்கள். எங்களை நிற்க வைத்து பார்த்தார்கள். இறந்த கைதிக்கு லுங்கி அவிழ்ந்துவிட்டது,. மற்றவர் தான் எடுத்து கட்டிவிட்டார். இறந்த கைதி அவரால் நிற்க முடியாமல் வர முடியாமல் தான் வந்தார். வடலூரிலிருந்து ரிமாண்டுக்கு வரும் வரை போலிசார் எங்களை எந்த தொந்தரவும் செய்யவில்லை. இறந்த சுரேஷ் யார் என்ற விவரம் வேனில் வந்த போது எனக்குத் தெரியாது. காவல் நிலையத்தில் எங்கள் எல்லாரையும் விசாரித்தது எதிரிகள் இல்லை,

வேறு போலிசார். முரளி, ஆனந்த பாபு, செல்வம் மூவரும் தான் முழுவதும் காவல் நிலையத்தில் இருந்தார்கள், அவர்களுக்கு எங்களை விசாரித்த போலிசாரை தெரியும். எங்களை விசாரித்தது இன்ஸ்பெக்டர் முரளி, ஆனந்த பாபு மற்றும் வேறு 3 போலிசார் தான். 3 போலிசார் மட்டும் ரெகுலராக இருந்து விசாரித்தார்கள். 04.03.2011 ல் என்னை ரிமாண்ட் செய்தார்கள். அதற்கு முன்பு 28.02.2011 முதல் வடலூர் காவல் நிலையத்தில் 2 நாளும், மகளிர் காவல் நிலையத்தில் ஒரு நாளும் இருந்தேன். வடலூர் காவல்நிலையத்திலிருந்து தான் என்னை ரிமாண்டுக்கு அழைத்து சென்றார்கள். மகளிர் காவல் நிலையத்திலிருந்து 04.03.2011 அன்று மாலை 6.00– 6.30 மணியளவில் இரண்டு ஆண் போலிசார் என்னை வீட்டிற்கு அழைத்து செல்வதாக சொல்லி வடலூர் காவல் நிலையம் அழைத்து வந்தார்கள். அதன் பிறகு 4 மணி நேரத்தில் ரிமாண்ட்க்கு அழைத்துசென்றார்கள். வேனில் ரிமாண்ட்டிற்கு அழைத்து சென்ற போது தான் முதல் முறையாக சுரேஷ் மற்றும் வேல்முருகனை பார்த்தேன் என்றால் சரிதான். வழக்கிற்காக நான் சொல்லி கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார் )**